# 4

## சுற்றுலாவின் பயன்கள்

இன்றைய கணினி உலகில் ஏற்பட்டுவரும் பொருளாதார முன்னேற்றம், அறிவியல் வளர்ச்சியால் விளையும் தொலை தொடர்பு, போக்குவரத்து வசதிகளால் உள்நாட்டு மற்றும் அயல்நாட்டு சுற்றுலா அதிகரித்து வருவதைக் கண்கூடாகக் காணலாம். சுற்றுலாத் தொழிலால் வளர்ந்த நாடுகளும், வளரும் நாடுகளும் பெரும் பயன்களை அடைந்துள்ளன. அவையாவன:-

(1) அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வருகையால் கிடைக்கும் அந்நியச் செலாவணி, உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் கிடைக்கும் வருவாயை விட அதிக அளவாகும். பல நாடுகளில் அந்நியச் செலாவணியை ஈட்டுவதில் சுற்றுலா பெரும்பங்கு வகிக்கிறது. ஏற்றுமதி, இறக்குமதியை விடக் குறைவாக இருக்கும் நாடுகளில் ஏற்படும் தேசிய வருவாய் இழப்பை சுற்றுலா ஏற்றுமதிப் பொருளாகச் செயல்பட்டு கணிசமாகக் குறைக்கிறது.

(2) பணப் பயிர்கள் ஏற்றுமதியை நம்பியிருக்கும் சிறு வளரும் நாடுகளில் சுற்றுலா நம்பகமான வருவாயை வழங்குகிறது.

(3) சுற்றுலாப் பயணி செலவிடும் பணம் பல கைகள் மாறி பல துறைகளை ஊக்குவிக்கும் வகையில் அமைகிறது. உண்ணும் உணவிலுள்ள

சத்துக்கள் இரத்தத்துடன் கலந்து, உடலுக்கு சக்தி அளிப்பதைப் போன்று சுற்றுலா வருவாய் தேசிய பொருளாதாரத்திற்கு ஊட்டமளிக்கிறது.

(4) சுற்றுலா வளர்ச்சிப் பணிகளான கட்டமைப்பு வசதிகளை அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் மட்டுமல்லாமல், உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளும், உள்ளூர் மக்களும், பிற தொழில் சார்ந்தோரும் பயன்படுத்தித் தங்கள் வளத்தைப் பெருக்குவதுடன் சுங்க வரி, விற்பனை வரி மூலம் நேரடியாகவும் சொத்து வரி, வருமான வரி மூலம் மறைமுகமாகவும் அரசின் வருவாய் பெருக வாய்ப்பமைகிறது.

(5) தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பல பகுதிகள் சுற்றுலா மூலம் வளமிக்க பகுதியாக மாறி வருகின்றன. அங்குள்ள இயற்கைக் காட்சிகள், வரலாற்றுச் சிறப்புமிக்க நினைவுச் சின்னங்களைக் காண வரும் சுற்றுலாப் பயணிகள் செலவிடும் பணம் அப்பகுதியிலுள்ள மக்களுக்கு மிகுந்த வேலை வாய்ப்பும், வர்த்தகம் பெருகுவதால் அவர்களது வாழ்க்கைத் தரம் உயரவும் உறுதுணை புரிகிறது.

(6) பலதரப்பட்ட மொழி பேசும் மக்கள் வாழும் இடங்களைக் காணும் சுற்றுலாப் பயணிகள் அவர்களின் கலை, பண்பாடு, வழிபாட்டு முறைகளை ஆர்வமுடன் கண்டு ரசிக்கின்றனர். இதனால் ஒருவருக்கொருவர் புரிந்துகொண்டு, நட்பும், நல்லுறவும் கொள்கின்றனர். உலக மக்களிடையே வேற்றுமையுணர்வைத் தகர்த்து, உலக ஒருமைப்பாட்டை வளர்ப்பதில் சுற்றுலா ஒரு சிறந்த சாதனமாக விளங்குகிறது.



Scanned by CamScanner